1972 ஆகஸ்ட் 19]

அது யுனஸ்கோவிற்கு அனுப்பப்பட இருக்கிறது. மத்திய அரசு இதற்கு 10 லட்சம் ரூபாய் உதவி செய்யவேண்டும் என்று மற்றொரு கோரிக்கையையும் அனுப்பியிருக்கிறார்கள். அதுவும் மத்திய அரசுக்கு அனுப்பப்படவிருக்கிறது.

தமிழில் புதிய சொற்கள்.

*182 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழில் புதிய சொற்களை தொகுக்கும் குழு ஏதேனும் தற்போது செயல்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதில் அங்கம் வகிப்பவர்கள், யார் யார் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழில் புதிய சொற்களை தொகுக்க, " அறிவியல் தொழில் நுட்பச் சொல்லாக்க ஆணைக்கழகம் " ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(இ) உறுப்பினர் பெயர்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த அறிவியல் தொழில் நுட்பச் சொல்லாக்க ஆணைக்கழகம் இதுவரை எத்தனை நூல்களை தொகுத்து அனுப்பியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதுவரை துண்டு துண்டாக வெளியிடப்பட்டிருக்கிற—அறிவியல், தொழில் நுட்பம்—போன்றவைகளில் எல்லாம் உள்ள கலைச் சொற்களை தொகுத்து ஒன்றாக உருவாக்கும் வகையில் இந்தக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உறுப்பினர் இன்னும் நியமிக்கப்படவில்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, சட்டத்துறையில் வல்லுநர்களைக் கொண்டு, சட்டத் துறையிலுள்ள கலைச் சொற்களை பயன்படுத்தி ' சட்ட கலைச் சொற்கள் சொல்லகராதி 'யை உருவாக்கியதுபோல், மருத்துவத்துறையிலும் அந்தத் துறையின் நிபுணர்களைக் கொண்டு ஒரு அகராதி உருவாக்கப்படுமா ? அதேபோன்று அறிவியல் துறை, தொழில் நுட்பத் துறை இவைபோன்ற ஒவ்வொருத் துறையிலும் உள்ள நிபுணர்களைக் கொண்டு, அந்தந்த துறை சம்பந்தப்பட்ட சொல்லகராதியை உருவாக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்று சட்டத் துறையில் கலைச் சொற்களை உருவாக்க ஒரு குழு இருந்தது. அதைப் போன்று மருத்துவத் துறை, பொறியியல் துறை போன்ற பல துறைகளிலும் உள்ள கலைச் சொற்களைக் கொண்ட சிறு சிறு வெளியீடுகள் வந்துள்ளன. அவற்றைத் தொகுத்து ஒரே அகராதியாகக் கொண்டு வருவதற்காகத்தான் இந்த அறிவியல் தொழில் நுட்பச் சொல்லாக்க ஆணைக் கழகம் அமைக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய கலைச் சொற்களும் புதிதாக கண்டுபிடிக்கப்படும் கலைச் சொற்களும் இந்த அகராதியில் இடம் பெறும்.

Intermediate Course

*133 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is a propcsal to reintroduce the Intermediate course in the Colleges in this State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இப்பொருள் பல்கலைக்கழகங்களின் அதிகார வரம்புக்கு உட்பட்டதாகும். அரசு, இதைப் பல்கலைக்கழகங்களுடன் கலந்து ஆய்ந்து வருகின்றது. இப்பொருள் அவைகளால் பரிசீலிக்கப்படுவதாகத் தெரிகிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், எல்லா யூனிவர்சிட்டிகளும் இன்டர்மீடியேட்—இரண்டாண்டு ஆக்குவதற்கு ஆதரவு கொடுத்திருந்தும், இன்னும் சர்க்கார் நியமித்த திட்ட கமிஷனால் ஏற்படுத்தப்பட்ட 'டாஸ்க்ஃபோர்ஸ்'கூட இன்டர்மீடியேட்டை இரண்டு வருஷமாக்க சிபாரிசு செய்திருந்தும் சர்க்கார் இதில் கால தாமதம் செய்வதற்கு காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த டாஸ்க்போர்ஸ் குழுவின் அறிக்கை இன்னும் அரசாங்கத்திற்கு அளிக்கப்படவில்லை. அவர்கள் தனிப்பட்ட முறையில் பல